உ

கடவுள் துணை.

# இந்துதேசராஜாங்க

# சங்கிரகதீபிகை.

இஃது

இஸ்கூல்மாணாக்கர்களின்உபயோகத்திற்காக

சேலஞ்ஜில்லா ஸ்கூல்

உதவிஉபாத்தியாயராகிய

ம-௱-௱-ஸ்ரீ

எம். வரதராஜுலுநாயகரவர்கள்

கேட்டுக்கொண்டபடி.

ன்றுபாஷைகள்சேர்ந்ததிரியாங்கசக்கரம்ஏற்படுத்திய

ம-௱-௱-ஸ்ரீ. சேலம். சுகவனமுதலியாரவர்கள்

குமாரர்

சே. மாரியப்பமுதலியாரால்.

செய்யப்பட்டு

சென்னை

புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமோதூத ௵ ஆடிமீ. ~~1870~~. 1930.

REGISTERED COPY-RIGHT.

# சாற்றுக்கவிகள்.

பழநாபுரியிலிருக்கும்

ம-௱-௱-ஸ்ரீ,

## மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள்

இயற்றிய

## இரட்டையடியாசிரியவிருத்தம்.

ஆசிரியமாகவந்தச்சுவர்க்கமுமேறி
யப்பள்ளியுலவிமேன்மை
யார்ந்துவாசித்தவரைநேர்ந்துபலநாட்டாரை
யருவிவரலூடுகாட்டிப்
பேசுமிடியொடுமின்னலையுமகற்றுவதாய்ப்
பிறங்குகாசினிவிளக்கப்
பெருகிந்துதேசராசாங்கசங்கிரகதீ
பிகையென்றமுகிலொன்றினைத்
தேசுபுனைந்தனதுபெயர்காரணக்குறிபெறத்
தெருளினனருளினனாற்
செஞ்சிலைமதற்குமாத்திரமன்றுமற்றுள்ள
தேவர்கட்குங்கவரிநாம்
வீசுவுமெனக்கழுகுமிடைவயற்சேலநகர்
மேவுசுகவனமால்சுதன்
விரைமாலிகைப்ரபலதுரைமார்மதிக்குநல
மிகுமாரியப்பவலனே. (க)

## எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

அணிதிகழ்பல்சொல்லகலிடைப்பொருளாமற்புதத்திரியுமச்
சுவையாங், கணிதயில்மெய்க்கதிருமங்கமைத்துக்கற்பவர்ம
னவிருணீங்கத், தணிவுறமிந்துதேசராஜாங்கசங்க்ரகதீபிகைத
ந்தான், மணிநதிசோலவயல்செறிசேலமாரியப்பக்கவிவலனே

ம-ா-ா-ஸ்ரீ, சேலம்

## வித்வான் சுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

மகவனமா னிடர்க்குநிதிவழங்குமிந்து
தேசத்தின்வண்மைமுன்வா
சகவனமா விருந்ததனைத்தமிழ்க்கவியா
லமைத்ததிசீர்தான்பெற்றனன்
பகவனமா விப்பெடையோடம்புயத்தி
லின்புமுற்றியணையுஞ்சேலச்
சுகவனமா னுதவினியசுகுணநய
மாரியப்பத்தூயோன்மாதோ. (௩)

---

மாரியப்ப னவுமொழுக்கின்மருவுமிந்து
தேசமுறைவகையைத்தானே
மாரியப்ப னுவற்கெதிராவயங்குதமிழ்க்
கவிகளினுல்வகுத்திட்டான்கா
மாரியப்பரருள்கொள்சுகவனமகிப
னுதவுதவமைந்தனை
மாரியப்ப னெனுமதுரவசனநய
வுசிதமதிவலவன்மாதோ (௪)

---

పైజెప్పినసుందరమొదల్యారివారిచే రచియింపబడిన.

ఉత్పలమాల.

అక్కరతోసుమాశుకవనాఖ్యసుతుండగుమారియప్పబల్
చక్కనిద్రావిడంబునరసత్వకవిత్వముతోనొనర్చినీ
చొక్కపుహిందుదేశకథజూచిఫణీంద్రుడుసిగ్గుచేతనే
యిక్కడివారికెల్లముఖమివ్వకదాగెరసాతలంబునన్. (౫)

---

సేలంరేంజ్ ఇన్స్పెక్టింగ్ స్కూల్ మాస్టరైన.

మ-రా-రా-

గా సుబ్బరాయలునాయుడువారిచేరచియింపబడినది.

కోరుభక్తజనులకెవుడు కొరతరాక కాచునా
కారుణికుని సేవదాసు కాంచినట్టి కవితచే
మారియప్ప చేసినట్టి మహితదేశచరితవే
గోరిచదువువారలెపుడు కొరతలేక తేరుదుర్ (౬)

ம-ா-ா-ஸ்ரீ,

## சார்வாய் - கதிர்வேற்கவிராயரவர்கள்

இயற்றிய விருத்தம்.

சகமதிலிந்ததேசச்சரித்திரந்தன்னையாரும்
புகழ்ந்திடத்தமிழிற்றண்டேன்பொழிகவியாகச்செய்தான்
சுகவனசுமுகன்பெற்றசுதனெனத்தழைக்கச்சேல
நகர்வளர்மாரியப்பநாவலனெனும்வல்லோனே. (எ)

---

சேலஞ்ஜில்லா சிவில்கோர்ட்டு வைக்கீல் - ம-ா-ா-ஸ்ரீ,
அப்பாசாமிபிள்ளையவர்களின்மாணாக்கரும்
இராமாயணபாரதப்பிரசங்கியுமாகிய
ம-ா-ா-ஸ்ரீ,

## இராமலிங்கசெட்டியாரவர்கள்

இயற்றிய விருத்தம்.

ஆயவளம்பெறுமிந்தயாசரித்திரமாமணியை
நேயமுறுந்தமிழ்நூலோர்க்கோர்வைதிரைத்தனனால்
தூயனெனுஞ்சேலநகர்ச்சுகவனவேளீன்ற
சேயனெனுமாரியப்பச்செந்தமிழ்நாவலனே. (அ)

வேறு

பனகமுடிதனிலமரும்பார்தனிலித்யாசரிதப்பண்பையோர்ந்து, புனிதமுறுநறுந்தமிழாலெழில்விருத்தப்பாவினமாப்புதுக்கினனால், கனகவளையெனமாடமலிசேலப்பதிவாழ்வோன்கவிஞர்க்கிவோன் அனகசுகவனபூபனருட்சுதனுமாரியப்பவறிஞன்றனே. (கூ)

---

சேலம்-ம-ா-ா-ஸ்ரீ,

## ப. ஆங்கமுத்துமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

ஞாலமிசை யிந்துதே சச்சரிதந் தன்னையிங்கு
கோலமிகுஞ் செந்தமிழாற் கூறினன்—சேலந்
தனில்வாழ் சுகவனவேள் தந்ததவ மைந்த
னெனுமாரி யப்பமா லே. (க௦)

விருத்தம்.

திருவனிதைவளமைசெறிதிரைகடல்சூழ்புவிதனிலேசிறந்தமிக்க, விருநிதியம்புகழ்படைத்தப்ரசைகளுறைப்ரபலமுளவிந்துதேசச், சரிதமதைச்செந்தமிழாற்சாற்றினன்சீர்ச்சேலநகர்தனில்வாணர்க்குத், தருவெனுநற்சுகவனவேள்தந்தசுதன்மாரியப்பதன்யன்றனே. (கக)

சேலந்தாலுகாகருக்கலவாடிமிட்டாஜமீன்தார்

ம-ா-ா-ஶ்ரீ,

## அரங்கசாமிநாயகரவர்கள்

இயற்றிய

நேரிசைவெண்பா.

இந்தப்புவிபாலெல்லோருங் கற்றுணர
இந்நூகதை யெல்லாமியம் பினன்—செந்தமிழாற்
சேலஞ் சுகவனமால் செல்வனென வேயுதித்த
கோலமிகுமாரியப்பக்கோன். (கஉ)

கலித்துறை.

கார்மேனிகண்ணன் கமலக்கழலின் கருணையினாற்
பார்மேவுமிந்துசரித்திரந்தன்னைப்பகுத்தறிந்து
சீர்மேவுசேலஞ்சுகவனனின்றசிகாமணிசேய்
ஏர்மேவுநன்மாரியப்பன்றமிழினியம்பினனே. (கங)

---

ம-ா-ா-ஶ்ரீ.

## சேலம் - கிருஷ்ணசாமிபிள்ளையவர்கள்

இயற்றிய விருத்தம்.

சீரியர்புகழிந்த்யாசரிதத்தைப்
பாரிற்செந்தமிழ்ப்பாவியற்கூறினன்
சீரிலங்குநற்சேலஞ்சுகவன
மாரன்றன்சுதன்மாரியப்பேந்தலே. (கங)

ம-ா-ா-ஶ்ரீ,

## சேலம் - ம- கா - இராமசாமிபிள்ளையவர்கள்

இயற்றிய விருத்தம்.

நீர்பூத்தநகிபதிருமூலகிலிந்துசரிதமென்றும்நிலைநின்றோங்கப், பார்பூத்தசெந்தமிழாற்பாடினனாற்பாவலர்க்குப்பரிசேநல்குஞ், சீர்பூத்தசேலநகர்ச்சுகவனவேள்செய்தவத்தாற்செனித்தமைந்தன், தார்பூத்ததிண்புயத்தான்மாரியப்பபூபனெனுந்தமிழ்ச்சிங்கேறே. (கச)

சேலம் ஷாப்கிபர்.

ம-ா-ா-ஶ்ரீ,

## கா· பிச்சமொகிதீன்ராவுத்தரவர்கள்

இயற்றிய விருத்தம.

விந்தைமிகுமிந்துதேசச்சரிதத்தைப்புலவோர்விருப்பாய்க்கேட்கச், செந்தமிழினிலக்கணங்கள்சிதையாமல்விருத்தத்தாற்செப்பினனால், சந்ததமுங்கீர்த்தியுடன்சேலநகர்தனில்மேவுதயாளன்தர்மம், புந்திநிறைசுகவனவேள்தவத்துதித்தமாரியப்பப்புலவன்றானே. (கரு)

உ

கடவுள் துணை.

# இந்துதேசராஜாங்கசங்கிரகதீபிகை.

## காப்பு

### நேரிசைவெண்பா.

சீர்மேவு மிந்தியா தேசச் சரிதத்தைப்
பேர்மேவு செந்தமிழாற் பேசவே—பார்மேவும்
பல்லுயிரு மன்பிற் படைத்துப் புரத்தல்செயும்
வல்லபர னேயருள வா.

### ஆசிரியவிருத்தம்.

மணிகொண்டபாந்தளின்முடிகொண்டபுடவிமிசை
வைகுமெழில்இந்தியாவில்
மன்னுமைம்பத்தாறுதேயங்களிலுமதிக
வளமையும்பொருள்கள்பலவும்
அணிகொண்டசெல்வமுங்குடிகளின்மாட்சிமையு
மதிகரித்தளகைநகர்போல்
யாதினுங்குறைவிலாதித்தேயமேன்மையுட
னழகாய்ச்செழித்தல்கண்டுங்
கனிகொண்டமகுடமுடியணிகின்றபுயவரசர்
கஜதுரகதளமிருந்துங்
கனவலிமைதீரமும்ஊக்கமதிலாமையுங்
கண்டும்வேற்றரசரானோர்
திணிகொண்டசேனையொடுவந்துபோர்செய்துமவர்
செங்கோலினைக்கவர்ந்து
தேசமுழுதும்புரந்தறநெறிசெலுத்திய
திறங்களையுரைப்பன்மாதோ. (க)

துவக்கம்.

கி. மு. இண்டியாமீதுபடைசிமெரிமஸெடுத்ததும்
இன்பமாங்கிறிஸ்துமுன்னே
1960. இனியாயிரத்துத்தொளாயிரத்தறுபதா
மேற்றவாண்டெனவறியலாம்
1400. இமையவர்கடுங்கிடுமஹாபாரதப்போரு
மெழிலாயிரத்துநானூ
950. இலங்கைமீதிற்படையிராகவனெடுத்தது
தொளாயிரத்தைம்பதாகும்
800. பண்டிதுதிமனுதர்மசாஸ்த்ரமுண்டானதும்
பார்புகழெண்ணூறென்னலாம்
550. பௌத்தமதநிருமித்தகௌதமனிறந்ததும்
பாங்கினைந்நூற்றைம்பதாம்
513. பார்சுடொயஸ்ப்படையெடுத்ததைந்நூற்றுடன்
பரவுபதின்மூன்றுகுமே
327. படைஅலெக்ஜாந்தருமெடுத்ததுமுந்நூற்றுடன்
பகருமிருபத்தேழிலே
315. தண்டுடையசந்த்ரகுப்தன்மகதம்ஆண்டவன்
சரிமுந்நூற்றைம்மூன்றதாம்
256. தாழ்ந்தபாக்த்ரியர்நாடுகிலையானதிருநூறு
தம்மொடைம்பத்தாறதாம்
55. சத்யவிக்கிரமார்க்கவருடமெண்ணேழிலே

கி. பி. சாலிவாகனசகாப்தம்

77. தயவுளகிறீஸ்துவின்பின்னெழுபதுடனேழு
தானெனச்செப்பலாகும்
மண்டலத்தனில்மகம்மதுமததிருத்திய
மகமதுபிறந்தவருடம்
567. மாகிலாவைந்நூற்றறுபத்தொடேழென
வளம்பெறப்பகரலாகும்
மகிபோலுமொளிர்கின்றமகமதியர்ஹிஜ்ராவின்
வருடத்தாரம்பமும்
622. வளர்கின்றவறுநூற்றிருபத்திரண்டென்ன
வரிசையாய்ச்செப்பலாமே. (உ)

கி. பி. இருநிதிகள்பெறுமிந்தியாவுக்குமகமதிய
ரியல்வுடன்முதலில்வந்த
664. தேற்றவாண்டறுநூற்றெட்டறுபத்துநான்கெனு
வெதார்த்தமொடுசெப்பலாகும்
இக்குநேர்மொழியுடைமடந்தையர்வசித்திடு
மெழிற்பகாராநாட்டிருந்
திஸ்மால்சமனியரசாற்சமானீவம்ச
மிதமோடுதாபித்தகும்
873. அருமையாமெண்ணூற்றெட்டெழுபத்துமூன்றெனவு
மன்புடன்தெரியலாகும்
அபிஸ்தகியென்பவன்குஜ்னிவமிசந்தன்னை
யறியநிலைசெய்ததுந்தொள்
961. ளாயிரத்தறுநூற்றெராவதாண்டென்னவும்
அஞ்சாதுசெப்பலாகும்
அவன்பின்சுபக்தகிபட்டந்தரித்தது
976. தொளாயிரத்தெழுபதாறும்
உரியவான்குஜ்னிமகமதுதனதுதேசத்தி
லூக்கமுளவரசனுன
997. துணைமைத்தொளாயிரத்துத்தொணூற்றேழெனப
துறுதியுளவருடமாகும்
ஒளிர்மகமதிந்தியாவின்மிசைமுதற்படை
யுறுக்கிடவெடுத்தவருடம்
1001. ஒப்பிலாதாயிரத்தொன்றுவதாமென
வுகந்துதான்செப்பலாகும்
முறுவல்மேற்கொண்டமகமதுவிரண்டாந்தடவை
1004. மொழிவருடநான்கில்மூன்றும்
1005. முறைவருடமைந்தெனவுநான்காவதானபடை
1008. , முறைவருடமெட்டென்னலாம்
1010. முறையைந்திலாண்டுபத்தென்னலாமாறுகு
1011. முறையாண்டுபதினென்றிலே
1013. }
1015. } முறையேழுபதின்மூன்றிலெட்டுபதினைந்தின்முறை
1017. யொன்பதும்பதினேழிலே.

கி. பி.

1022. பத்தாவதாகுமுறையிருபத்திரண்டென்ப
பதினொராமுறையின்வருடம்
1023. பாங்குபெறுமிருபத்துமூன்றெனப்பன்னிரண்
டாமுறைபசர்ந்தவருடம்
1024. பரவிவரும்ஆயிரத்திருபத்துநான்கெனப்
பண்புடன்செப்பலாகும்
படையெடுப்பிவைமுழுதுமேற்சொன்னவாண்டிலே
பதிசோமநாதின்மீதாம்
1030. செத்தான்மகம்மதொருமுப்பதாம்வருடம்
செழித்திடுங்கோரியர்கு
ஜினிராச்சியங்கொள்ளைதானடித்திட்டதுஞ்
1052. செறியுமைம்பத்திரண்டாம்
சீர்கொண்மகமதுகோரிகுஜினிதேசத்திலே
ஜெயவரசுதான்கொண்டதுஞ்
1174. செப்புநூற்றெழுபத்துநான்காவதாண்டிலே
திகழ்இந்தியாவின்மீது
மத்தாகிநிதேடமுன்றுவதாகுமுறை
மாகோரிபடையெடுப்பு
1191. வளர்கின்றநூற்றுத்தொண்ணூற்றொராம்வருடமென
வளமுடனியம்பலாகும்
வமிசபட்டாணியைத்தாபித்தவனுமுதலில்
வாகுபெறுடில்லியாண்ட
மகமதியர்முதல்வனும்ஆங்குத்புதீனைட்சி
1206. வருடமிருநூற்றாறிலே
கொத்தானபடையுடையஆராம்டிலிக்கிறைமை
கொளுமிரண்டாமரசனுப்க்
1210. குறிப்பாகவந்ததிருநூற்றோபத்தென்று
கூறுமாண்டாகுமென்ப
1211. குடிலஆல்தமஷுமிருநூற்றுடன்பதினொன்று
குறைவிலாஇந்தியாவில்
கோளரியெனுஞ்ஜிங்கிஸ்கான்படையெடுத்ததுங்
1222 துணிக்குமிருபத்திரண்டே. (௩)

கி. பி. தில்லிக்கரசிரிஜையாபீகமானதுந்

1236. திகழ்வருடம்ஆறுறதாம்

தேர்ந்தபைராம்பட்டமதுபெற்றவருடமுஞ்

1240. செப்பிடும்நாற்பதாகும்

திறமைமாசாத்தாளவாரம்பமானதுஞ்

1242. சேருநாற்பத்திரண்டாம்

தில்லிக்கண்அவனிளையமகனிரண்டாவதாஞ்

சீர்கொண்டமகமதென்போன்

வல்லசக்கிரவர்த்தியானதிருநூற்றுடன்

1246. மருவுநாற்பத்தாறதாம்

மகமதுவின்மந்த்ரியாகியபாலினென்பவன்

மகிமையுளவரசனாக

வந்ததுமவன்பின்பொராயிரத்திருநூற்று

1266. வருடமறுபத்தாறதாம்

வள்ளற்கிகோபாத்துபட்டமதுபெற்றதும்

1286. வாகினெண்பத்தாறதாம்

நல்லவீராவதாம்பட்டாணியாங்கில்ஜி

நயமானவமிசமதனை

நாட்டியஜிலாலுதீன்ஆயிரத்திருநூற்று

1288. நன்மையெண்பதினெட்டாம்

நட்புமிகுதக்ஷிணத்தின்மீதுமகமதியர்

நாட்டியேபடையெடுத்து

நலியாதுசென்றதிருநூற்றுத்தொணூற்றுநான்

1294. காம்வருடமென்னலாகும்

அல்லல்கொள்ஜிலாலுதீனைத்தமையன்மைந்தன்

லாகொன்றுபட்டமேவி [அல்

அரசானதாயிரத்திருநூற்றுடன்றொணூற்

1295. றைந்தாவதாண்டென்னலாம்

ஆண்மைமகமதியர்கள்தெலுங்குகன்னடராஜ்ய

மாவல்ராய்க்கைக்கொண்டது

1299. ஆயிரத்திருநூற்றுடன்தொணூற்றொன்பதாம்

ஆண்டெனச்செப்பலாமே. (ரு)

கி. பி. ஊமார்சிம்ஹாசனமதேறியதுமுன்னூற்றொ
1310. டொளிர்கின்றபத்தாண்டிலே
ஊக்கமொபரிக்காயிரத்துமுன்னூற்றுடன்
1317. ஒப்புபதினேழாண்டிலே
ஊனமில்கைசர்தில்லிக்கரசனானதுமுன்
1319. னூற்றுடன்பத்தொன்பதில்
உறுதிகொள்ஜியாசுடீன்தொக்லாக்குவமிசத்தை
யுண்மையாய்த்தாபித்ததும்
1321. ஆமாண்டுமுன்னூற்றிருபதுடனொன்றிலே
யாண்மைச்சுனாகானெனும்
அரியமகமதுதொக்லாக்வந்ததிருபதுட
1325. னாண்டைந்ததாகுமென்பார்
அடலுறுபிரோஜிஷாதோக்லாக்குவமிசத்தி
லறையுமூன்றுமரசனா
1351. வானதுமுனூற்றைம்பதோடொன்றிலேயென்ன
வமைதியாய்ச்செப்பலாகும்
பூமாலைபுனையிரண்டாவதாந்தொக்லாக்கு
புயவரசுபெற்றவருடம்
1388. புகழுமுன்னூற்றெண்பதுடனாலிரண்டெனப்
புனிதமொடுரைக்கலாகும்
புகல்அபூகருமிரண்டாமகமத்வரவுமே
1389. பொங்குமெண்பத்தொன்பதாம்
புகரிலுமையூன்சிம்ஹாசனமீதமர்ந்ததும்
1394. பொற்புளதொணூற்றுநான்காம்
ஏமாப்புடன்தாமர்லேனிந்தியாவின்மே
லேபடையெடுத்தவருடம்
1398. எழிலாயிரத்துமுன்னூற்றுத்தொண்ணூற்றெட்
டெனப்பகரும்வருடமாகும்
ஏதமில்சைதுவம்சந்தனைத்தாபித்த
விகலானகைசர்கான்றன்
1414. இயல்வருடம்நானூற்றொடீரேழெனப்புவியி
லின்பொடுவிளம்பலாமே. (௮)

கி. பி. அவன்பின்புசைத்மொபாரிக்வந்துதிருபதுட
1421. ணொன்றதாகுமென்பார்
ஆண்மையுளசைத்மகம்மதுவந்தவருடநா
1435. னூற்றுமுப்பத்தைந்ததாம்
அலாசைதுவமிசத்தின்முடிவானவரசான
1444. தாண்டுநாற்பத்துநான்கில்
ஆவல்கொள்பிலாலுகான்லோடிதில்லியைவசம
தாக்கியேலோடிவமிசம்
பவமிலாப்புவிமீதுதாபித்தவருடமும்
1450. பாங்குநானூற்றைம்பதாம்
பார்த்தலோமியுடையாஸ்கேபாப்குடோப்பென்ற
பண்புநன்னம்பிக்கையின்
பகர்முனைதனைப்பிடித்ததுவுநானூற்றுடன்
1487. பரவுமெண்பத்தேழிலே
பரிவுற்றசெக்கெண்டர்லோடிவமிசத்திலே
பனுமீரண்டாவதாகும்
நவரத்னமுடிசூடுமரசானவருடநா
1488. னூற்றெண்பதோடெட்டிலே
நயமிகும்அமேரிகாகண்டமதுகிர்ஸ்தாபர்
நன்மைக்கொலம்பஸாலே
நாட்டியேகண்டுகொண்டதுநான்குநூற்றேடு
1492. நவிலுந்தொண்ணூற்றிரண்டாம்
நட்புமிகுவாஸ்கோடிகாமாவுமினியநன்
னம்பிக்கைமுனைசுற்றியே
எவருமிகவாச்சர்யமேற்கொள்ளவந்தது
1498. மிலங்குதொண்ணூற்றெட்டிலே
இங்லீஷ்மேமாதமிருபத்திரண்டினி
லிறங்கல்கள்ளிக்கோட்டையில்
இவன்மீண்டுபோர்த்துகல்லுக்கேகியதுவருட
1499. மிதமுளதொண்ணூற்றொன்பதாம்
இங்குகேப்ரால்வருகையிற்ப்ரேஜிலைக்கண்ட
1500. தியலுமைந்நூற்றண்டிலே. (எ)

கி. பி. பிரான்ஸிஸ்கோஆல்மிடாவிந்தியாவரவெளிப்
1505. பட்டதைனூற்றைந்தில்ஆல்
பான்ஸொஆல்புக்கிந்தியாவுக்குவந்ததும்
1510. பகரைநூற்றுப்பத்தில்ஆல்
1515. பகர்குமரணம்பத்தொடைந்தாவதாண்டில்இப்
பரகிம்லொடிவமிசமுடிவின்
பண்புபெறுமரசனும்ஐந்நூறேடுதொகை
1517. பரவுபதினேழாண்டிலே
தராதரந்தெரிபேபர்பானிபட்டென்னுந்
தலத்திலேகடினசண்டை
தவருமலேபுரிந்திப்ரஹீம்லோடியைச்
சயித்துமொகலாய்ராச்சியஸ்
தாபிதம்இந்த்யாவிலேசெய்ததைந்நூறு
1524. சார்ந்தவிருபத்துநான்காம்
1527. சதிசீக்கர்சண்டையைந்நூற்றிருபத்தேழு
சரியானவருடமாகும்
நராதிபர்கள்மெச்சுசாந்தேரிமுற்றுகைவருடம்
1528. நாட்டுமிருபத்தெட்டதாம்
நன்மையுளபேபருயர்விடவுமுமையூன்பட்டம்
நலமுடன்பெற்றவருடம்
1530. நவிலும்ஐநூற்றுமுப்பானென்பர்கூர்ச்சரர்
1534. நாட்டினிற்செயம்நான்கிலே
நதிகள்சூழ்தில்லியரசாக்ஷியைச்சர்ஷா
நயந்தபகரித்தவதுவும்
பராக்ரமமிலாதவுமையூன்பாரசீகப்
பதிக்கிரிந்தோடியதுவும்
1540. பகர்கின்றஆயிரத்தைந்நூற்றுநாற்பதாம்
பழமையுளவருடமாம்அக்
1542. பர்ஜனனம்நாற்பத்திரண்டிலேஷேர்ஷா
பறந்துயிர்க்கொலையுண்டதும்
பரவைசூழ்பூமியிற்புகலுமைந்நூற்றுநாற்
1545. பத்தைந்தெனும்வருடமே. (அ)

கி. பி. உமையூன்றுதுராச்சியமதைச் சர்ஷாவி
ஞெப்புசந்ததியாரிடம்
ஓங்கிமீட்டுக்கொண்டவாண்டுமைநூற்றே
1555. டியர்ந்தவைம்பத்தைந்திலே
உறுதியாயக்பர்சிங்காதனமதேறிய
1556. துவக்குமைம்பத்தாறதாம்
ஊனமில்லாதுகூர்ச்சரம்அக்பர்மீட்டதும்
1573. உண்மையெழுபத்துமூன்றும்
சமரமதுசெய்துபங்காளஞ்சயித்ததுஞ்
1575. சமவேழுபத்தைந்ததாம்
சாமர்த்தியன்டிரோக்குலகமதுசுற்றியாத்
திரைதனைச்செய்தவருடம்
1577. தாலமிசையெழுபதுடனேழாகும்அக்பர்காஷ்
மீரஞ்சயித்தவருடம்
தப்பாதவாயிரத்தைந்நூற்றெண்பதைச்
1585. சார்ந்தவைந்தாமென்னலாம்
கமழ்கின்றசோலைசூழ்சிந்துவும்அக்பரால்
அடினமொடுபிடிபட்டது
1592. காண்கின்றதொண்ணூற்றிரண்டிந்தியாவிலே
கண்ணியவுலாந்தர்முதலில்
கப்பல்மேல்வந்ததைநூற்றுத்தொண்ணூறுடன்
1598. காட்டுமெட்டாம்வருடமாம்
கருதும்ஈஷ்ட்டிண்டியாகம்பேனியானது
1600. கணக்குள்ளவறுநூற்றிலே
தமணியந்தேடித்தரித்திரர்தமைக்காத்த
சத்யவான்அக்பர்சாவும்
ஜாங்கீர்திலிக்கரசுதான்பெற்றதுஞ்சொலிற்
1605. சால்பாறுநூற்றைந்திலே
சலீம்நூர்ஜிகானென்னுமவடனைமணந்தது
1611. தகுந்தபதினோராண்டிலே
தருமாங்கிலேயர்சூரத்தில்வர்த்தகசாலை
1612. தாபித்ததீராறிலே.

கி. பி. தானியவீஷ்டிண்டியாசம்பேனியேற்பாடு
1612. சரியானபனிரண்டிலே
தக்கஅசமத்பாத்திலுங்காம்பெயினிலும்வர்த்
தகசாலையேற்பட்டது
1613. தமமிலாவறுநூற்றுடன்பதின்மூன்றெனச்
சாற்றிடும்வருடமாகும்
சர்தாமஸ்ரோதுரைஇங்க்லாந்திலேநின்று
தானதிபதியாகவே
1615. மானியாய்வந்ததைம்மூன்ருண்டிலேகொலை
வயங்கும்அம்பாயினவில்
1621. வன்மையில்நடந்திருபத்தொன்றிலேஷாஜி
கான்வளமையானசக்ர
வர்த்தியானதுவுமஹாராஷ்டிராரிராஜ்யத்தை
வண்மையாய்த்தாபித்தசி
1627. வாஜிஜனனமுமாறுநூற்றெடிருபத்தேழு
வருடமென்றறியலாகும்
ஈனமில்லாச்சாந்துஜார்ஜெனுங்கோட்டையிங்
லீஷ்காரர்கட்டியதுதான்
1637. இன்பமாமறுநூற்றுமுப்பதுடனேழாகு
மினிதுவளருஞ்சென்னையின்
ஏதமில்லாக்கடலினோரத்திலேந்துமயி
லிசைநீளமுந்தனையின்வாய்
இயங்குமொருமயிலகலமும்முடையகோட்டையிங்க்
லீஷ்காரர்சந்த்ரகிரியின்
பானுநேர்அரசனிடமாய்ப்பெற்றவருடமும்
1639. பண்டுமுப்பத்தொன்பதாம்
படுநோயினற்ஷாஜிகானிருந்ததினற்
பகர்ந்திடும்ராஜ்யபாரம்
பண்புடன்தாராபுரித்தஅஞ்சுஜா
பலத்திடுசலீமானினல்
பறிபட்டுமுறிவட்டுவிட்டோடினதுவுமம்
1657. பத்தேழெனும்வருடமே. (௧௦)

கி. பி. மோராதுமௌரங்கஜேபுஞ்ஜஸ்வாண்சிங்கை
முன்தோற்கடித்தவதுவும்
முயலுதலிலாதஷாஜீகானைநீக்கினதும்
முந்திஔரங்கஜேபு
முடிச்சக்ரவர்த்தியானதுவுமைம்பத்தோடு
1658. மொழியுமெட்டாண்டென்னலாம்
மோசஔரங்க்ஜேபுசூஜாவைவென்றதும்
1659. முடிவிலைம்பத்தொன்பதாம்
சீரானஇங்க்லாந்தினரசிரண்டாவதாய்ச்
செப்புசார்லெஸ்துரைக்குத்
திரைமருவுபம்பாய்கொடுத்ததறுநூற்றுடன்
1662. சேர்ந்தவறுபத்திரண்டாம்
திவ்யநாகப்பட்டணம்பழவேற்காடு
சேர்ந்தேஉலாந்தர்மிகவே
செய்யவர்த்தகசாலையேற்படுத்தியவாண்டு
1663. திறமையறுபத்துமூன்றும்
காரானகரனிரண்டாஞ்சார்லெஸ்துரையிடங்
கண்யமுளவீஷ்டிண்டியா
கம்பெனியர்பம்பாய்தனைப்பெற்றதும்பிரான்ஸ்ய
கனவீஷ்டிஇந்த்யாவெனக்
கடியாகவேற்பட்டதுங்கொடியசிவாஜி
கருதிடுமிராஜபட்டம்
1664. கைக்கொண்டதறுநூற்றுடறுபத்துநான்கெனக்
கண்டிடவிளம்பலாகும்
நேரானஷாஜிகான்செத்ததறுநூற்றுடன்
1666. நேர்ந்தவறுபத்தாறதாம்
நிலைமையாய்சூரத்திலேப்ரான்ஸ்சுதேசத்தார்
நியாயவர்த்தகசாலையை
1668. நியமித்ததறுபதோடெட்டென்பர்சிவாஜி
நிஜமாகவுயிர்விட்டது
நிகராகும்ஆயிரத்தறுநூற்றெண்பதா
1680. நிறைவுள்ளவருடமாமே. (கக)

கி. பி. பட்டமதுசிவாஜிசுதனெனுஞ்சம்பாஜி
பாங்குடன்பெற்றவருடம்
1682. பகருமறுநூற்றெருடெண்பத்திரண்டென்பர்மேம்
பாடுடையவாங்கிலேயர்
பணிசார்ந்துதாவீதுகோட்டைவிலைவாங்கியது
1691. பரவுதொண்ணூற்றெருடொன்றும்
பரான்ஸீயர்புதுவைகுடியேறினதும்ஆங்க்லேயர்
பதியுல்லியங்கோட்டையை
இட்டமொடுகல்கதாவிற்கட்டலும்புதிய
ஈஷ்டிண்டியாகம்பெனி
ஏற்பாடுபெற்றதும்ஆறுநூற்றெருடுதொணூற்
1698. றெட்டெனவியம்பலாகும்
இகலானஔரங்கஜேபுமாய்ந்திட்டபின்
பினியஷாஹாலமென்போன்
1707. எழிலரசுபெற்றதெழுநூற்றேழெனச்சொல்வர்
இத்திசையிலுள்ளபேர்கள்
கட்டுடன்சுகமுறக்காத்ததிகசற்கீர்த்தி
கமம்புனைடெட்ஈஷ்டிண்டியா
1708. கம்பேனியுண்டானதெழுநூற்றெருடெட்டெனக்
காண்கின்றவருடமாகும்
கருதுஷாஹாலமுமிறக்கமாயுசுடீன்ஜி
காந்தர்ஷாநாமமுடனே
கனசக்ரவர்த்தியானதுமேழுநூறெருடு
1712. கலந்தபனிரண்டாகுமாம்
திட்டமிகுபேரோக்ஷர்டில்லிக்குமன்னனுய்ச்
1713. சேர்ந்ததும்பதின்மூன்றிலே
செப்பிடுமவன்கொலையடைந்ததும்ரபியுதீன்
ஜெயவரசுதான்செய்ததும்
திறமைமகமதுஷாவவன்பின்புவந்ததுந்
1719. தேர்ந்திடும்பத்தொன்பதாம்
சீல்முனாதர்ஷாதிலியைப்பிடித்ததுந்
1739. தெளியுமுப்பத்தொன்பதே. (கஉ)

கி. பி. துடியாகஐரோப்பில்ஆங்க்லேயருக்கும்ப்ரான்
சுக்காரருக்குமிடையிற்
சோர்விலாசண்டையுண்டானதெழுநூற்றுடன்
1744. சொல்லுநாற்பத்துநான்காம்
தூயப்ரான்சுத்துரைலபோர்டெனேயால்சென்னை
தோதாய்ப்பிடித்தவருடம்
1746. தொன்மைநாற்பத்தாறதாருந்தனிச்சாந்து
தாவீதெனுங்கோட்டையைப்
பிடிக்கப்ரயத்தினம்டியூப்ளேபுரிந்ததும்
பெருமகமத்ஷாசெத்ததும்
பின்பகமத்ஷாடில்லிதனிலரசனானதும்
1747. பேசுநாற்பத்தேழதாம்
பிரபுமேஜர்லாரென்சுவந்ததும்ஐதர்பாத்
பேதைமூல்மல்க்குஜைஜாம்
பிராணனைவிடுத்ததும்ஆயிரத்தெழுநூற்று
1748. பிறகுநாற்பத்தெட்டதாம்
திடமானதக்ஷிணத்திசையில்நாஜர்ஜிங்கு
திகழுமிர்ஜாபஜிங்கு
திண்சண்டைசெய்ததுந்தஞ்சையின்யுத்தமுந்
தேவிகோட்டைப்பிடிப்பும்
1749. செய்யநாற்பத்தொன்பதாம்வருடமென்னலாந்
திரிசிராப்பள்ளிதன்னில்
தெரிமுற்றுகையுமிரண்டாமலங்கர்டில்லி
ஜெயவரசுதான்பெற்றதும்
1750. வடிவுபெறும்ஆயிரத்தேழுநூற்றைம்பதாம்
வருடமெனவெண்ணலாகும்
மகிழ்கிளைவ்வுஆர்க்காட்டைமுற்றுகைப்போட்டதும்
வலியஆரணியுத்தமும்
1751. வளர்கின்றஐம்பத்தொராவதாண்டாகும்
வயங்குராஜாசாஹிபை
மன்னுகாவேரிபாக்கந்தனிலடித்ததும்
1752. வளமையைம்பத்திரண்டே. (கரு)

கி. பி. திரிசிராப்பளியின்முற்றுகையைவிடுவித்ததுந
திறல்கொள்பாகூர்யுத்தமும்
தீயகொலையுண்டசந்தாசாகிபிறுதியுந்
திவ்யசெங்கற்பட்டுடன்
திண்கோவளங்கிளைவ்பிடித்ததும்முதலிலே
செய்யகிளைவ்இங்கிலாந்து
1752. சென்றதுவுமெழுநூற்றைம்பத்திரண்டெனத்
தீர்க்கமாய்ச்செப்பலாகும்
பிரியமிகுடியுப்ளேபிரான்ஸுவிற்சென்றதும்
பிரபலமுளகொடுவென்பவன்
பிரான்சிவிலிருந்துகமிஷனராகவிங்கனுப்
பித்திடப்பட்டதுந்தான்
பேதமில்லாதவாண்டாயிரத்தெழுநூறு
1754. பின்னைம்பதொடுநான்கதாம்
பெருமையுறுகிளைவ்இந்தியாவுக்குவந்ததும்
1755. பேணுமைம்பத்தைந்திலே
நரியனையர்வாழ்கோரியாக்கோட்டையைக்கிளைவ்
நலிந்திடவிடித்தவதுவும்
நயபங்காளத்தில்அலிவர்த்திகான்செத்ததும்
நட்பறுசுராஜுடௌலா
நலமானபட்டமதுபெற்றதுங்கல்கதா
நகரைமுற்றுகைபோட்டதும்
நாசமோசந்தருமிருட்டறையுமெழுநூற்று
1756. நாற்பதொடுபதினாறிலே
குறிப்பான்பிளாசியில்நடந்திட்டயுத்தமுங்
குசலவான்மியர்ஜாபர்தான்
கூர்ந்துபங்காளவரசாக்ஷிகைக்கொண்டதுங்
குணமுள்ளவாங்கிலேயர்
கொடிநாட்டிவொளிர்சந்த்ரநகரைப்பிடித்ததுங்
கொடியன்சுராஜுடௌலா
கோபமீரானாற்கொலைப்பட்டிறந்ததுங்
1757 கூறுமைம்பத்தேழிலே. (கஉ)

கி. பி. மங்களமிகும்ப்ரான்சுவிட்டுலாலீவந்து
வளர்சாந்துதாவிதெனும்
வலிமிகுங்கோட்டைதனைமுற்றுகைப்போட்டதும்
வயங்கியஷஹாலம்பாட்டு
வளமானகோட்டைதனைமுற்றுகைப்போட்டதும்
வண்மையுறுமியர்ஜாபர்தான்
மாவுலாந்தரினுதவிநாடியதுமுயர்கர்னல்
மன்னனும்போர்ட்டென்பவன்
செங்களநபாபினுக்குதவிசெய்புலாந்தரை
சீர்கெடமுடிக்கினதுவும்
1758. திகழாயிரத்தேழுநூற்றைம்பத்தெட்டு
சேர்வருடமென்னலாகும்
சின்சுரத்தின்சண்டையானதும்ஷாஹாலத்
தில்லிதனிலரசானதும்
1759. இனியாயிரத்தேழுநூற்றைம்பதோடொன்ப
தென்றுசெப்பிடுவருடமாம்
இங்லாண்டுதேயத்தைநோக்கியேக்ளைவ்இரண்
டாந்தரம்போனவதுவும்
ஏதமில்லாவந்தவாசியின்சண்டையு
மிறப்புமீரான்கொண்டதும்
இதமிலாமியர்ஜாபர்சிங்காதனந்தனி
லிருந்துதள்ளுண்டவதுவும்
இரண்டாவதாமுறைப்பாட்டுவின்முற்றுகையு
1760. மின்பமாமறுபதாகும்
பங்கையப்பூவிலுறைமங்கைநடனஞ்செயும்
பாங்கானபுதுவைநாட்டைப்
பலவான்கர்னல்கூட்டுக்கொப்புக்கொடுத்ததும்
1761. பகருமறுபத்தொன்றிலே
பவளவிதழ்வனிதையர்கள் பரவியேவாழ்கின்ற
பண்புபெறுகோரியாவில்
பார்த்தோர்திடுக்கிடப்போரானவதுவுமறு
1763. பத்துமூன்றும்வருடமே. (௧௫)

கி. பி. குணமிலாகுஜடௌலாஷஹாலம்மீயர்
காசிம்இம்முக்கொடியரின்
கூர்மையுளசேனைகளையிங்கிலீஷு-வீரர்கள்
கொதித்தடித்தோட்டினதுவும்
குடிவளங்கொண்டபக்சாரினதுசண்டையுங்
1764. கூறுமறுபத்துநான்காம்
கொடிநாட்டிடுங்கிளைவுமூன்றுவதாந்தடவை
கோரியிந்த்யாவந்ததும்
மணமிகுத்திடுசோலைசூழ்ந்தகோராவிலே
மன்னுகடைசித்தடவையில்
வலியற்றகுஜடௌலாதோல்விபெற்றுமன
வசமற்றுமுறுகிட்டதும்
மணிமகுடமணியிங்கிலீஷ்க்காரருக்கவன்
வாஞ்சையின்வணங்கினதுவும்
மலிகின்றவாயிரத்தேழுநூற்றறுபதுடன்
1765. வளருமைந்தாம்வருடமாம்
பணமிகுந்தேயங்கள்பாங்காச்செயித்த[illegible]ா
பார்த்திபன்கிளைவ்கடைசியாய்
பண்மிகும்இங்க்லாண்டுதேயத்தைநோக்கியே
பண்புடன்போனததுவும்
பலமானஹைதரின்சண்டையுங்கர்னல்ஸ்மித்
பரவுஹைதர்சேனையில்
பாய்ந்துபுலிபோலடித்துச்செங்கமாவிலும்
பழமையம்பூர்தன்னிலும்
அணுமிகுந்திருவண்ணமலைதனிலுமங்கங்
ககற்றியேயோட்டினதுவும்
ஐதர்சென்னைக்குவந்தாங்கிலேயரிடமாக
அண்டிச்சமாதானமுன்
1769. அன்புடன்செய்ததும்அறுபதோடொன்பதென
லாகுஞ்சரிப்படுத்தல்
ஆனதொருசட்டம்ஏற்பட்டதெழுபத்துமூன்
1773. றும்வருடமெனலாகுமே. (கசு)

1773. ஆயிரத்தெழுநூற்றெழுபத்துமூன்றுவ
தாண்டினில்வாரனேஷ்டிங்ஸ்
அதிகபுகழொடுமுதற்கவர்னர்ஜனரல்பட்ட
மதுபெற்றுவந்ததாகும்
ஆண்மையுளரோகிலனாரோகில்கண்டியைவிடுத்
தப்பொழுதிலோட்டவேண்டி
அஞ்சாதசூஜடௌலாவினுக்குதவிதனை
அருமையாய்ச்செய்தவதுவும்
தேயமதுசீர்தூக்கவென்றுசெனரல்கிளாவ
ரிங்குடன்தேர்ந்தமான்சன்
இவ்வமொழிபகர்பிலிப்ஸ்ஸோடுப்ரான்சிஸ்ஸெனத்
தெரியுமிந்நான்குபேர்கள்
தீர்க்கமாயிந்த்யாவினில்வந்தமர்ந்ததுந்
திகழும்ஐயோத்திதனிலே
சேர்நபாபொடுசெய்சமாதானமுந்திறல்
செழித்தமஹாராஷ்ட்ரருடனே
மாயமுளமுதல்யுத்தமாரம்பமானதும்
1774. வருடமெழுபத்துநான்காம்
1775. வளமருவுமெழுபதோடைந்தாவதாண்டினில்
வாகுபெறுநன்சொமாரன்
வஞ்சனைமிகப்பெருகிவாழாதுதூக்கினிடை
மாய்ந்துதான்போனதாகும்
மண்டலமகிழ்ந்தபூரண்டர்சமதானமும்
வலிமைபான்சன்இறப்பும்
தூயவாண்டாயிரத்தெழுநூறுமெழுபதொடு
1776. தொகையாறெனச்செப்பலாம்
துரைஜனரல்கிளாவரிங்மரணமதடைந்ததுஞ்
1777. சொல்லுமெழுபத்தேழிலே [றொடு
தோல்விலாச்சண்டைகொட்டார்ட்டுமஹராஷ்ட்ர
சோர்வறச்செய்தவருடம்
1778. துங்கமுளவேழுநூற்றெழுபதோடெட்டெனத்
துணிவாகவறியலாமே. (௧௭)

கி. பி. இகலார்வசிக்கும்அசமத்பாத்பிடித்ததும்
இனியலாகோர்குவாலியர்
ஏற்றகோட்டைகளிரண்டுங்காப்ட்டன்பாபனெனும்
ஏந்தலாற்பிடிபட்டதும்
இறைஐதராலிகர்ஞடிக்கின்மீதினி
லெதிர்த்ததும்ஐதருடனே
இரண்டாவதாம்போர்தொடுத்ததும்பொலிலூரி
லெளிமைபெலிமுறிபட்டதும்
மகிமையுளகர்னல்கூட்ச்செங்கல்பட்டையும்வந்த
வாசையும்விடுவித்ததும்
1780. வளமைபெறும்ஆயிரத்தெழுநூற்ருெண்பதாம்
வருடமெனமொழியலாகும்
வாகுபெறுபோர்ட்டுநோவோவென்னுநகர்தனில்
வலியுடனடந்தபோரும்
வந்தவாசைகர்னல்கூட்டுமென்ருர்தடவ
வகையுடன்விடுவித்ததும்
சகலரும்புகழ்காசிநகர்தனிற்கலகமுஞ்
சோளங்கரின்சண்டையும்
1781. சார்ந்தவெழுநூற்றெண்பதுடனென்றெனச்சொலல்
சரியானவருடமாகும்
தப்பாதுசிற்றூரில்ஐதர்தான்மாண்டதும்
தஞ்சையருகிற்ப்ராத்துவெய்ட்
சமற்றதுங்கூட்டுவந்தவாசியைநான்
காந்தடவைவிடுவித்ததும்
ஆகாகபட்டணமுடன்திருங்காமலையை
யாண்மையுளவாங்கிலேயர்
அஞ்சாதலாந்தர்பாற்கெஞ்சாதுமிஞ்சியே
யடலொடுபிடித்தவதுவும்
அகணிசூழ்சால்பினதுடன்படிக்கையுமுதலி
லற்புதமராஷ்டர்சண்டை
1782. ஆனதும்எழுநூற்ருெண்பத்திரண்டாவ
தாண்டெனத்தெரியலாலே, (கஅ)

கி. பி. ஈடில்லையென்றுமைசூரிலேடிப்புவும்
இன்பமாயுரசானதும்
ஏதமில்லாதநற்பேதனூர்முற்றுகையு
மினியகர்னல்காம்பெலால்
எங்கணும்புகழ்பெற்றமங்களூர்காத்தது
மெதார்த்தசட்டம்பாகலால்
1783. ஏற்பாடுசெய்ததுவுமெண்பத்துமூன்றுவ
தேற்றவாண்டெனவறியலாம்
பூடணமணிந்தபிட்டென்பவன்சட்டம்
புதுக்கியதுமங்களூரில்
புயபலட்டிப்புச்சமாதானமதுவும்
1784. புகழ்ந்தவெண்பத்துநான்காம்
புண்யவார்னேஷ்டிங்ஙிங்லாண்டுபோனதும்
போர்ச்சிண்டியாவாக்கரா
பொருப்பொடுபிடித்ததுவுமெழுநூற்றினெண்பதொடு
1785. பொங்குமைந்தாண்டதாகும்
தேடுநிதிபோன்றமாகாரன்வாலீஸ்கவர்னர்
ஜெனரலீராவதாகத்
தேயமதைசீர்னுக்கவந்ததும்டிப்புடன்
தீர்க்கயுத்தாரம்பமும்
1786. தேர்ந்தவெழுநூற்றெண்பதோடாறெனத்தொகை
திறத்துடன்புகலலாகும்
திப்புதிருவான்கூர்மிசைப்படையெடுத்ததுந்
1789. தெரியுமெண்பத்தொன்பதாம்
காடுமலைசூழ்கின்றகோயமுத்தூர்திண்டி
கல்கரூர்தாராபுரம்
கனஜெனரல்மிட்டேசிறுலேப்பிடித்ததுங்
1790. கணிதமாந்தொண்ணூறிலே
கருணையாங்க்லேயர்பெங்களூரைப்பிடித்ததுங்
கற்கோட்டைநந்திதுர்க்கம்
கடிகொள்சேவன்துர்க்கமிவைபிடித்ததுவுங்
1791. கடந்ததொண்ணூற்றொன்றிலே. (௧௯)

கி. பி. உத்தமக்காரன்வாலீஸ்ப்பிரபுசென்றுதா
ஞறுதியுடனேமுற்றுகை.
ஒளிர்கின்றசீரங்கபட்டணம்போட்டதுவு
மொவ்வாதடிப்பிடத்தில்
உண்மைச்சமாதானமும்மவன்புத்ரரிரு
வோர்தமைப்புணையாகவே
1792. ஒத்துக்கொடுத்ததுந்தொண்ணூற்றிரண்டெனு
வுரைத்திடும்வருடமாகும்
சத்யகுணசர்ஜான்ஷோர்மூன்றுவதாங்கவர்னர்
ஜனரலெனவந்தவருடம்
தவருநவாயிரத்தெழுநூறுதொண்ணூறு
1793. சாருமூன்றென்னலாகும்
சாந்தஇங்க்லீஷ்காரர்நைஜாங்கரந்தனைத்
தானழுவவிட்டவதுவும்
சத்யமில்லாதமகராஷ்ட்ரரவனுட்டைச்
சதிக்கொள்ளையிட்டவதுவும்
வத்துமிகுலங்கையிலுலாந்தர்களினகரெலாம்
வலிமையுளஆங்கிலேயர்
வசமானதும்ஐயோத்யாநபாபானவன்
வானேறியுயிர்விட்டதும்
வண்விஜயராலிபட்டந்தனைப்பெற்றதும்
1795. வருடந்தொணூற்றைந்திலே
வாஞ்சையில்லாவிஜயராலிதள்ளுண்டபின்
மருவுசுரதத்தஆலி
சித்திரமதாய்நபாபாகியதுவுந்தொணூற்
1797. றேழெனச்செப்பலாகும்
சீர்மேவுமார்னிங்டனுலாவதாங்கவர்னர்
ஜெனரலெனவந்தவதுவும்
திறமையுளநைஜாமினெடுபுதியதாகுமொரு
திரளானவொப்பந்தமும்
சிதருதவருடமெழுநூற்றுத்தொணூற்றுடன்
798. சேர்ந்தவெட்டாகும்மாதோ. (உ0)

கி. பி. ஊக்கமுளடிப்புசீட்சிரிலும்மால்வெல்லி
யிலுமோடிமுறிபட்டதும்
1798. உயராயிரத்தேழுநூற்றுத்தொணூறுதொகை
யொடுவருடமெட்டாகுமால்
ஊகவான்ஜெனரல்ஹரீஸ்பிரபுபடைகளுட
ணேங்கியேசென்றுமெண்மேல்
உறுதியாஞ்சீரங்கபட்டணங்கொண்டதும்
ஒவ்வாதடிப்பிறப்பும்
ஏக்கம்பிடித்தமேற்படியான்குமாரர்களை
இறைமைபெறுவேலூரொனும்
ஏற்றநகருக்கேற்றல்செய்ததும்மைசூரின்
ஏந்தலாய்க்கிருஷ்ணராஜன்
1799. ஏற்பாடுபெற்றதும்தொண்ணூற்ரொடொன்பதா
மியல்கின்றவருடமாகும்
இந்தியாமீதுஜீமானுஷாபடைதனை
1801. யெடுத்ததுமெணூற்ரொன்றிலே
மூர்க்கமாய்ச்சிந்தியாவோல்கார்கடுந்துமிக
மூண்டுபோர்செய்தவதுவும்
மோசப்பைஷ்வாவுடன்பாசீன்சமாதனமும்
முதிருமஹராஷ்ட்ரருடனே
முறையிரண்டாம்யுத்தமானதுமெணூற்றுடன்
1802. மொழியிரண்டாம்வருடமாம்
மோடிமிகுஜனரல்வெல்லெஸ்லிஆமீத்நகரை
முக்யமாய்க்கைக்கொண்டதும்
தீர்க்கஆசேயில்ஆர்கேயத்திலுங்கொடிய
தீரமேற்கொண்டபோரும்
திருவுல்வும்அலிகர்பிடிபட்டதுந்தில்லியின்
அருகினிற்செயமுற்றதும்
திறமையுளஆகராஆங்க்லேயருக்குத்
திடத்தொடொப்பித்தவதுவும்
1803. திகழாயிரத்தெணூற்ரேடுமூன்ருண்டெனச்
செப்பிடத்தகுதியாமே. (உக)

கி. பி. எப்போதுமறியாதலாஸ்வாரிசண்டையும்
இனியகாவில்கர்ஜயமும்
இகல்சிந்தியாவொடும்பீராரிராஜனுடு
மின்பச்சமாதானமும்
1803. எண்ணூற்றுமூன்றுவதாண்டெனத்தேர்ந்தவர்க
ளெவரும்விளம்புவார்கள்
ஏர்மேவுஜெயபூனாஹோல்காரொனுந்துஷ்ட
னிடருடன்பறிசெய்ததும்
குப்பையாய்ச்சேர்ந்தமகராஷ்ட்ரர்மூன்றுவதாங்
கொடியபோராரம்பமும்
கோபமதுகொண்டுலார்ட்லேக்குஹல்கார்தனைக்
கூறுபாகாபாத்திலே
குலைந்திடமுடிக்கியதுவுண்டிக்குயுத்தமுங்
1804. கூறுமெண்ணூற்றுநான்காம்
கோட்டையுளபர்த்ப்பூனாமுதலில்ஆங்க்லேயர்கள்
கூடிமுற்றுகைபோட்டதும்
செப்புமொழிதவறுதகாரன்வாலீஸ்ப்பிரபு
திகழ்இந்தியாவில்வந்து
சிவனைவிடுத்ததும்ஹல்காரிேனுடுமுன்
செய்திடுசமாதானமும்
சீலமிகுசர்ஜார்ஜுபார்லோவெனுங்கவர்னர்
செனரலாய்வந்தவருடம்
1805. தெரியாயிரத்தெண்ணூற்றைந்தாவதாமெனத்
திறமையாயுணரலாகும்
அப்பாவெனப்புதுமையோங்கவோர்கலகமும்
அணிபெற்றவேலூரிலே
1806. ஆனதும்ஆயிரத்தெண்ணூற்றுடாறுவ-
தாண்டென்னவறியலாகும்
ஆறுவதாங்கவர்னர்ஜனரல்மிண்டோப்பிர
பறிந்திங்குவந்தவருடம்
1807. ஆயிரத்தெண்ணூற்றேடேழாவதாமெனவு
மருமையாய்ச்செப்பலாமே. (உ உ

கி. பி. ஏர்கொள்எல்பின்ஸ்டன்காபூலென்னுநகருக்கும்
இனியசர்ஜான்மால்கமில்
விண்டியாவடபுறப்பார்ஸிகாகருக்கு
மேற்றதானுபதியராய்
இன்புடனனுப்பியதும்ஆயிரத்தெண்ணூற்றெ
1807. டேழாவதாம்வருடமாம்
இணையிலாச்சென்னைதனிலோடக்கிட்டதோ
ரிகலானகொடியகலகம்
1809. பார்கொண்டவாயிரத்தெண்ணூற்றொடொன்பதாம்
பழமையுளவாண்டிலேதான்
பலவான்அபர்க்கிராம்பீகல்லபோர்போன்
பயன்கொள்மோரீஸ்தீவினை
பண்பொடுபிடித்ததோரெண்ணூறுடன்சேர்ந்த
1811. பதினொராம்வருடமாகும்
பணிகொண்டமாயிராப்பிரபுவேழாங்கவர்னர்
பகர்ஜெனரலாய்வந்ததும்
சீர்கொண்டவாங்க்லேயர்சார்டர்பியமித்ததுந்
1813. திகழாண்டுபதின்மூன்றதாம்
தேயநேபாளத்தில்யுத்தமேற்கொண்டதுந்
தீயபைஷ்வ்வாகலகமும்
தேனமர்பொழிற்கலங்காமுற்றுகையுமினிய
ஜெனரல்கிலஸ்பின்முடிவும்
சீலமுளகுமயூன்பிடித்ததுவுமெண்ணூறு
1814. சேர்ந்தபதினான்காகுமாம்
வார்கொள்மகவான்பூரில்யுத்தமும்ஹரிஹர்பூர்
வரிசையாய்ப்பிடிபட்டதும்
மகிமையுளநேபாளசண்டைமுடிவானதும்
வல்லத்திரும்பாக்ஜியை
வன்சிறையிலிட்டதும்பின்பவன்தப்பியே
மனமடிந்தோடினதுவும்
1816. வாகுபெறுமெண்ணூற்றிஞெடுபதினாறதாம்
வருடமெனமொழியலாமே. (உ௬)

கி. பி. ஐயமில்லாதுதிரிமகராஷ்ட்ரரோடுநான்
காவதுத்தாரம்பமும்
ஆஜிபைஷ்வாவொடுநடந்தசமதானமும்
அணிக்கிர்க்கிதன்னில்யுத்தம்
ஆனதும்நாகபூர்யுத்தமுமதன்பின்பில்
அங்குமுற்றுகைபோட்டதும்
அதிசயஜபல்பூரினுத்தமுமாகித்பூர்
அடலானயுத்தமதுவும்
1817. மையிலாவெண்ணூற்றிரேடுபதினேழெனும்
வரிசைபெறுவருடமாகும்
மால்கோம்துரைக்குபிண்டாரிமுதல்வன்கரிம்
வணங்கலுஞ்சீத்திறப்பும்
வளமையுளகோரிகோயத்தினதுசண்டையும்
வளருமப்பாசாகிபு
வாய்த்துமறுபடியோடினதுவுமெண்ணூற்றுடன்
1818. வருடமீரொன்பதாகும்
வையகம்புகழ்அசிகர்கோட்டையைக்கொண்டதும்
1819. வருடமொருபத்தொன்பதாம்
மால்ஆமஹர்ஸ்ட்டுபிரபெட்டாங்கவர்னராய்
மகிமையாய்வந்ததும்பர்
மாவினில்நடந்தமுதலுத்தமதுமெண்ணூறு
1823. மருவுமிருபத்துமூன்றும்
மாசிலாரங்கூன்பிடித்ததுங்கேமண்டின்
மார்ட்டபான்தேவாயெனும்
ஐயர்புகழ்கின்றநகரங்களைக்கொண்டதுவும்
1824. ஆண்டெண்ணூற்றிருபத்துநான்
கரக்கான்பிரோன்பியுவையன்பாய்ச்செயித்ததுவும்
1825. ஆண்டெண்ணூற்றையைந்ததாம்
ஆந்தபூர்சம்மதமும்பாகாமின்சண்டையும்
ஆண்மையுளபர்ட்டுபூரை
அணிநெருங்கிச்சென்றுமுற்றுகைபுரிந்ததுவும்
1326. ஆறுமிருபத்தாறதே. (௨௪)

கி. பி. ஒட்டார்தௌலத்தராவ்சிந்த்யாவிறந்திட்ட
1827. தோர்ந்தவிருபத்தேழதாம்
ஒன்பதாங்கவர்னர்ஜனர்ல்பெண்டிக்குவந்தவாண்
1828. டோங்குமிருபத்தெட்டதாம்
உடன்கட்டையிந்துவிதவைகளேறுகொடுமையை
1829. ஒழித்ததிருபத்தொன்பதாம்
உண்மையாங்கம்பேனியார்வாங்கிஷமகூறை
ஒளியோங்கவரசாண்டதும்
பெட்டாரொனும்ஈஷ்டுஇந்தியாகம்பெனியர்
பெருமைதருசாடர்முதலிற்
பேதமொடுநீங்கிமறுபடிபுதுப்பித்ததும்
1833. பேணுமுப்பத்துமூன்றும்
பெருகுகாவடர்குடகுசேர்த்தவாண்டெண்ணூறு
1834. பின்புமுப்பத்துநான்காம்
பெட்புமெட்காப்க்கவர்னர்ஜனரலாம்வேலையைப்
1835. பெறுகைமுப்பத்தைந்திலே
கெட்டோரையாளும்ஆக்லாண்டுபெத்தாங்கெவர்னர்
ஜனரலெனவந்தவருடம்
1836. கிரமமாமெண்ணூற்றுமுப்பதோடாறெனக்
கிறியிலாதெண்ணலாகும்
கிர்க்கிறைதுரைத்தனத்தார்களாற்றள்ளியது
1837. கிளருமுப்பத்தேழதாம்
கேள்ஆப்புகானியர்கள்சண்டைத்துவக்கமுங்
கீர்த்தியாமுப்பத்திரக்
கட்டாமுடன்படிக்கையும்வருடமுப்பது
1838. கலந்தஎட்டென்னலாகும்
காண்குஜினியைப்பிடித்ததுவுமீண்டரசனுக்
கண்யமுளஷாசுஜாவின்
கனமிகும்பட்டமும்பாவானியுத்தமுங்
கடினவான்தஸ்மகம்மத்
கருதியவணக்கமும்ரஞ்ஜீத்ஸிங்முடிவதுங்
1839. காட்டுமுப்பத்தொன்பதே. (உ௬)

கி. பி. ஓங்கிவளர்இங்க்லீஷ்சேனைகாபூலிலே
உண்மையாய்க்கொலையுண்டது
1841. உறுதியாமெண்ணூற்றுநாற்பத்தினோராவ
துளவருடமென்னலாகும்
உவமையில்லாதஎல்லென்பரோப்ரபுபதின்
ஒன்றாவதாங்கவர்னரும்
ஊராப்கனிஸ்தானைநோக்கியேபொல்லக்கு
மூகமனதாய்ச்சென்றதும்
பாங்குள்ளஜக்டலக்கண்டமக்கென்னுமிரு
பட்டணம்பிடிபட்டதும்
பார்மேவும்ஆப்கானிஸ்தானிலிங்கிலீஷ்ச்சிறைகள்
பண்புடன்விடுபட்டதும்
பலமானஆப்கானியுத்தமுடிவுஞ்சிந்து
பதிசண்டையாரம்பமும்
பரவிவளர்ஆயிரத்தெண்ணூற்றுநாற்பதொடு
1842. பனுமிரண்டாம்வருடமாம்
தேங்கமழ்தடஞ்செறிமியானியின்யுத்தமுஞ்
சீர்ஐதர்பாத்யுத்தமும்
சிந்துராஜ்யந்தனைக்கம்பெனியார்ஆக்ஞையிற்
சேர்த்தவதுவுங்குவால்யரில்
தீர்க்கமாஞ்சண்டைகள்நடந்ததுந்தௌலத்ராவ்
சிந்த்யாவிறப்புண்டதும்
சீலன்மாமாசாஹிபைப்பிரதியரசனைச்
சீர்த்தியாய்நியமித்ததும்
மாங்குயிலைவென்றமொழிமங்கையர்வசிக்கின்ற
மஹாராஜபூர்யுத்தமும்
மணிமிகும்பண்ணியாரின்போருமெண்ணூறு
1843. மருவுநாற்பத்துமூன்றும்
வண்குவாலியர்அரசனொடுசமாதானமும்
மன்னுசர்ஹென்றிஹாடிஞ்ச்
மகிழ்பனிரண்டாங்கவர்னர்ஜனரலாய்வந்ததும்
1844. வருடநாற்பத்துநான்கே. (௨௯)

கி. பி. கடினசிந்தைக்காரர்சீக்கியரொடும்போர்
1844. கலத்தல்நாற்பத்துநான்காம்
கடுமையாய்முட்கியில்நடந்தசண்டையுமதிக
கனமுளபிரோஜிஷாவில்
கண்டபடிசண்டையும்ஆயிரத்தெண்ணூறு
1845. காணுநாற்பத்தைந்ததாம்
கண்யமுளபேருறையும்அலிவாலின்யுத்தமுங்
கபடமாஞ்சுபரொயோனில்
துடிகொண்டயுத்தமுஞ்சீக்கரசரோடுமே
துணிவாஞ்சமாதானமும்
1846. தோன்றியவெணூற்றுநாற்பத்தாறதாமெனச்
சொல்லிடும்வருடமாகும்
துரைதலெளஸ்பிரபுபதின்மூன்றுவதாங்கவர்னர்
தூயஜனர்லெனவந்ததும்
சுத்தமறுமூல்ராஜ—வஞ்சனைநடத்தையும்
துஷ்டசீக்கியரிரண்டாம்
திடமூனசண்டையுமிராமநகர்யுத்தமுந்
திகழ்சத்தஷாநகரிலே
திரளானசண்டையும்மூல்த்தான்பிடித்ததும்
1848. திகழுநாற்பத்தெட்டதாம்
சில்லியான்வாலாவின்யுத்தமுங்குஜராத்து
தேசத்தினடல்யுத்தமும்
திறலாங்கிலேயர்பாற்பஞ்சாபுசேர்ந்ததுஞ்
1849. செப்புநாற்பத்தொன்பதாம்
வடிவுடையறையில்மார்க்கமான்துவுமின்தபால்
வகையாகவேற்பட்டதும்
வலியபர்மாவினிலிரண்டாவதுத்தமும்
வாஞ்சையுளகம்டொர்லாம்பர்ட்
வரிசைபெறுதானுதிபதியாயனுப்பியதும்
1851. வருடமைம்பத்தொன்றதாம்
வளமிகும்பைகோவெனும்பட்டணஞ்சேர்ந்த
1852. வருடமைம்பத்திரண்டே. (உ௭)

கி. பி. காசுமிருபர்மியருடன்சமாதானமுங்
கம்பெனியர்சார்ட்டரில்வி
கற்பங்களானதுவும் ஆயிரத்தெண்ணூறு
1853. காணுமைம்பத்துமூன்றும்
காசினிதனிற்புகழுநாகபூர்ஆங்க்லேயர்
கைக்கொண்டவாண்டானது
1154. கருதுமெண்ணூற்றைம்பதோடுநான்கென்னக்
கணக்குடன்செப்பலாகும்
பாசமில்லாதசந்தாளர்செய்கலகமது
1255. பண்பின்ஐம்பத்தைந்ததாம்
பலர்துதிஅயோத்தியாஆங்க்லேயராக்ஷியொடு
பாங்குடன்சேர்த்தவதுவும்
பலமானகானிங்குப்ரபுகவர்னர்ஜனரலாய்ப்
பதிநான்கின்முறைவந்ததும்
1856. பவமில்லாவெண்ணூற்றினைம்பதுடனாறெனும்
பழமையாம்வருடமெனலாம்
தேசபங்காளத்திலேசிபாய்கலகமும்
செய்யகான்பூர்கொலையதும்
தில்லிஇங்க்லீஷ்காரர்கைவசமதானதுஞ்
1857. சேருமைம்பத்தேழதாம்
ஜெயதுரைத்தனமஹாராணியாரவர்கள்பாற்
1858. சேர்ந்ததைம்பத்தெட்டதாம்
சீர்பெறும்வருமானவரியினேற்பாடதும்
செப்புஸர்வுல்யம்டெனிசன்
தேசுபெறுகவர்னராய்ச்சென்னைக்குவந்ததும்
1860. திகழறுபதாம்ஆண்டிலே
தீரனெல்ஜீன்பிரபுபதினார்ந்ததாங்கவர்னர்
1862. சேருமறுபத்திரண்டில்
1864. செய்யலாரன்ஸாறுபத்துநான்கின்கம்டாக்ஸ்
1865. சிதைவாறுபத்தைந்திலே
சென்னைக்குநேபியர்கவர்னர்எண்ணூறுடன்
1866. சேர்ந்தவறுபத்தாறதே. (௨௭)

முற்றிற்று.

## கி. பி. கவர்னர்ஜனரல்களின்வரிசை.

அதிகபுகழ்பெருகுமிங்லீஷ்காரரிந்த்யாவி
லன்பினேற்றுக்கொண்டசீர்
அற்புதமிருங்கவர்னர்ஜனரல்களின்முதல்வனும்
ஆண்மையுளவாரனேஸ்டிங்ஸ்
1773. ஆகுதியோராயிரத்தெழுநூற்றினெழுபதுட
னிணையுமூன்றும்வருடமாம்
1786. அரியகாரன்வாலிஸ்எழுநூற்றினெண்பதோ
டாறிலேஸர்ஜானுஷோர்
1793. துதிபரவுதொண்ணூற்றுமூன்றிலேமார்னிங்க்டன்
1798. தூயதொண்ணூற்றெட்டிலே
1805. துகளறும்பார்லோவெண்ணூற்றைந்தில்மிண்டோ
1807. துலங்கிடுவெண்ணூற்றேழிலே
1813. துரைமாயிராவெணூற்றுப்பதின்மூன்றிலே
சூரனெனுமாமஹார்ஸ்ட்டு
1823. சொல்லரியவிருபத்துமூன்றிலேபெண்டிக்
1828. தொடர்ந்தவிருபத்தெட்டிலே
1836. மூதிஆக்குலாண்டுப்ரபுமுப்பதுடனாறினில்
மதன்போலும்எல்லென்பரோ
1842. வரிசையாறேழிலேஸர்ஹென்றியாடின்ச்சு
1844. வளருநாற்பத்துநான்கில்
1848. வாஞ்சையுளதாலெளசிநாற்பதுடனெட்டிலே
வல்லகானிங்குப்ரபுவும்
வளமுடையவோராயிரத்தெணூற்றைம்பதுடன்
1856. மருவுமாறும்ஆண்டிலே
1862. கதியுடையஎல்ஜீனுமறுபத்திரண்டிற்
கதித்தஸர்ஜானுலாறொன்ஸ்

கணக்குள்ளஓராயிரத்தெண்ணூற்றறுபதொடு
1864. நாட்டுநான்காம்வருடமாம்
கருதியாஞ்சொல்லுமிப்ப்ரபுமார்கணக்கெலாங்
கசடறவறிந்துகொள்வாய்
கயல்விழிக்கனிமொழிக்கடிமலர்க்கரதலக்
காஞ்சிதருமாஞ்சியனமே. (௨௧)

## வாழி.

நேரிசைவெண்பா.

* வாழிபரமன்மலர்க்கழல்கள்வாழிசுரர்
வாழிதவமுனிவோர்வண்புலவோர்—வாழியறம்
வாழிமறைவாழிமுகில்வாழியிந்துதேசவளம்
வாழியுயர்ஆங்க்லேயர்வாழ்வு.

முற்றிற்று.

---

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்க ளிதன்கிரயம் அணா ௪- வீதம் சேலங் கணக்கத்தெருவி லிருக்கும் சே. சு. மாரியப்ப முதலியாரிடத்தில் கொடுத்து வாங்கிக்கொள்ளலாம் பிறதேயத்தி லுள்ளவர்க ளப்புத்தகக்கிரயமுந் தபாற்கூலியுஞ் சேர்த்துத் தாங்களெழுதுங் கடிதத்திற்குள் அரையணா தபால்முத்திரைகளை வைத்தனுப்பி யழைப்பித்துக் கொள்ளலாம்.

இங்ஙனம்
சேலம்
செந்துலாலா